இருக்கக்கூடிய புத்தனம்பட்டி அரசு கலைக் கல்லூரி இருக்கின்றது. அந்தக் கலைக் கல்லூரியில் மட்டும் 3,000-க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கல்வி பயின்றுகொண்டு இருக்கின்றார்கள். எல்லோரையும் சேர்த்தால் 12,000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை அங்கு இருப்பதினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து அந்தப் பகுதியில் அரசு மருத்துவமனை அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதி ஆண்டிலே நிதிநிலைமைக்கு ஏற்ப, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 209, திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.*

209—

சிறு தொழில்

*** 39024—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்த் துறை மூலம் மகளிருக்கு சிறு தொழில் தொடங்க அரசு உதவி புரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகைத் திட்டம் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் ஆண்/பெண் தொழில் முனைவோர்களுக்கு தங்களது திட்டங்களுக்குப் பெறும் வங்கிக் கடனுக்கு 20 முதல் 30 விழுக்காடு வரை விளிம்புத் தொகை மானியம் வழங்கப்படும் திட்டம் தற்போது*

2005 மார்ச் 28]

நடைமுறையில் உள்ளது. இந்தத் திட்டத்தில் மகளிருக்கென்று 30 விழுக்காடு வரை அதிகபட்சமாக விளிம்புத் தொகை மானியம் அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் கதர் வாரியத் துறை மூலமாக சிறு தொழில் செய்வதற்கு மகளிருக்கு உதவித் தொகை வேண்டுமென்று சொல்லி, வங்கிகளை அணுகுகின்றபோது எந்த வங்கியிலும் கடன் கொடுக்க முன்வருவதில்லை. அதேசமயத்தில், அரசிடம் அணுகி, சிறு தொழில் செய்வதற்கு மகளிர் முயற்சி எடுத்துக்கொண்டால், அதற்குரிய வசதி வாய்ப்புகளையும் அரசாங்கம் உடனடியாகச் செய்து கொடுக்கின்ற சூழ்நிலையில் வால்பாறை தொகுதியில், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற மகளிருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கு, சிறு தொழில் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளிம்புத் தொகைத் திட்டத்தின் மூலமாக இதுவரை மும்பை கதர் வாரியத்தினுடைய ஆணைக் குழுவின் ஆணையின்பேரில் 4 கோடியே 72 இலட்சத்து 52 ஆயிரத்து 561 ரூபாய் இதுவரை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 1,118 பயனாளிகள் பயனடைந்திருக்கிறார்கள். வால்பாறை தொகுதியிலே வழங்கப்படவில்லை என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா, அலகாபாத் வங்கி, கார்ப்பரேஷன் வங்கி, தேனா வங்கி, ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர், யூகோ. வங்கி, ஸ்டேட் பாங்க் ஆஃப் திருவாங்கூர் இதுபோன்ற வங்கிகளில் இந்த விளிம்புத் தொகை டெபாசிட் செய்யப்பட்டு, அதன் அடிப்படையிலே வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியிலே மகளிர் தொழில் முனைவோர் இருப்பார்களேயானால், அவர்கள் இந்த வங்கிகளை அணுகுகின்றபோது, மும்பை கதர் வாரியத்தினுடைய ஆணைக் குழுவால், தமிழ்நாடு கதர் வாரியத்திற்கு அளிக்கப்பட்டிருக்கின்ற விளிம்புத் தொகை விடுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 28

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கே மகளிர் சிறு தொழில் செய்வதற்கு bag செய்வதற்கு, ஊதுபத்தி, மெழுகுவர்த்தி, கற்பூரம் தயாரித்தல், கயிறு தயாரித்தல் போன்ற சிறு தொழில்களோடு கைவினைப் பொருட்கள் தயாரிக்கின்ற சிறு தொழிலைச் செய்ய வேண்டுமென்று சொல்லி கடந்த 2, 3 ஆண்டு காலமாக அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் கடன் கேட்டு அவர்கள் எடுத்துக்கொண்ட பல முயற்சிகளும் வீணாகிவிட்டன. குறிப்பாக, வேட்டைக்காரன்புதூரில் சண்முக கவுண்டர் என்பவரின் மகள் கவிதா என்பவர் கடந்த 3 ஆண்டு காலமாக அவர்கள் வங்கிக்கும் வீட்டிற்கும் நடந்து கொண்டே இருக்கிறார்கள். ஆனால், அவருக்கு இதுவரை சிறு தொழில் செய்வதற்கு கடன் வழங்கப்படவில்லை. கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்கூட Lead Bank கூட்டத்திலேயே இதைக் கண்டித்து சிறு தொழில் செய்வதற்கு கடன் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டும்கூட அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எந்தவிதமான கடன் உதவி செய்வதற்கும் முன்வரவில்லை. மேலும் K.V.I.C. மற்றும் மாநில அரசும் சேர்ந்து, மகளிர் சிறு தொழில் செய்வதற்கு வருடா வருடம் வழங்குகின்ற மானியத் தொகையைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசும், மாநில அரசும் வழங்குகின்ற இந்த மானியத் தொகை மிகக் குறைவாக இருப்பதால்தான் எங்களால் கடன் வழங்க முடியவில்லை என்று வங்கியிலே இருக்கின்ற அதிகாரிகள் சொல்கின்றார்கள். ஆகவே, நான் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வால்பாறை தொகுதியைப் பொறுத்தவரை மில்களோ, ஆலைகளோ, தொழிற்சாலைகளோ எதுவுமே கிடையாது. படித்துவிட்டு வேலையில்லாத மகளிருக்கு இதைத் தவிர வேறு வழி கிடையாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வால்பாறை தொகுதியினுடைய மகளிர் சிறு தொழில் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு முன்வருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வதோடு, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட படித்துவிட்டு மூன்று ஆண்டு பட்டம் பெற்ற கவிதா என்ற பெண் – மூன்று ஆண்டு காலமாக வங்கிக்கு அலைந்து கொண்டிருக்கிறார்; அவருக்குக் கடன் வழங்க முன்வரவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். கோவை மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு இந்தப் பெண்ணிற்கு உடனடியாகக் கடன் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2005 மார்ச் 28]

முற்பகல் 10–30

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர்த் துறையின் மூலமாக வழங்கப்படுகின்ற, விளிம்புத் தொகைத் திட்டம் என்பது வால்பாறை தொகுதிக்கு மட்டுமல்ல. இந்தக் கடனைப் பெறுவதற்கு சில தகுதிகள் நிர்ணயம் செய்திருக்கிறார்கள் மும்பை கதர் வாரியம். கதர் ஆணைக் குழு என்பது மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலே இருக்கிறது. தனி நபரான கைவினைஞர் அல்லது தொழில் முனைவோர் அல்லது நிறுவனங்கள், தொழில் அமைப்புகள், கூட்டமைப்புகள், அறக்கட்டளைகள், சுய உதவிக் குழுக்கள் இதுபோன்ற கூட்டமைப்பு சேர்ந்து கடன் பெறுவதற்கு முயற்சி செய்கிறபோது கண்டிப்பாக வங்கிகள் சொல்லக்கூடிய தகுதியின் அடிப்படையிலும், நம்முடைய கதர் கிராமத் தொழில் வாரியம் சொல்லுகின்ற தகுதியின் அடிப்படையிலும் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதைத்தான் நான் ஏற்கெனவே, முன்னாலேயே குறிப்பிட்டேன்; எவ்வளவு தொகை விடுவிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதிகப்படுத்துவதற்கு நீங்கள்தான் முயற்சி செய்ய வேண்டும். மத்தியிலே இருக்கிற நிதி அமைச்சரிடம் எடுத்துச் சொல்லி இந்த விளிம்புத் தொகையை வால்பாறைக்கு மட்டுமல்ல 234 தொகுதிகளுக்கும் விடுவிப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 210, திரு. டி.பி. பொன்னம்பலம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

210—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***49875—திரு. டி.பி. பொன்னம்பலம்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் மாட்டுத்தாவணி அருகில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?